முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், நாகர்கோவில்

நாள். 14.08.2025

O.S. 195/2022

வா.சா.1 -ராஜாசிங்

1,2 பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை.

1) எனது அப்பா சன்முக நாடார் அரசு உதவி பெறும் பள்ளியில் ஆசிரியர் ஆவார். அவர் பஞ்சாய்த்து தலைவராக 10 வருடங்களாக புத்தளம் பேருராட்சியில் இருந்தார். அவர் 16.03.2014 ம் இறந்தார் என்றால் சரியல்ல 14.03.2011 ல் இறந்தார். 1, 3 பிரதிவாதிகளின் சகோதரி ராஜ செல்வி 1 , 2 பிரதிவாதிகள் பெயருக்கு பாகவிடுதலைப்பத்திரம்1.2.1982 ல் எழுதிக்கொடுத்தார் என்றால் எனக்கு அது தெரியாது.

2) வா.சா.ஆ. 2 ஆவணத்தில் மேற்படி பாகப்பிரிவினை பத்திரம் உள்ளது என்றால் சரி. ராஜசெல்விக்கு பாத்தியப்பட்ட 1/3 பாகத்தை 1, 2 பிரதிவாதிக்கு எழுதிக்கொடுத்தார் என்றால் இல்லை. ராஜசெல்விக்கு ¼ பங்கு மட்டுமே உள்ளது. வா.சா.ஆ.2 ஆவணத்தில் 1/3 பங்கு சொத்து எழுதிக்கொடுத்ததாக உள்ளது என்றால் அது தவறுதலாக எழுதப்பட்டுள்ளது.

3) ராஜசெல்வி 1982 ல் எழுதிக்கொடுத்ததில் இருந்து 2011 ம் வருடம் வரை எனது அப்பா அவரது பங்கையும் சேர்த்து எழுதிக்கொடுத்ததாக எந்த பிரச்சனையும் செய்யவில்லை என்றால் சரி. அவர்கள் இருவருக்கும் பேச்சு வார்த்தை இல்லை. ராஜசெல்விக்கு ¼ பங்கு என்றால் மீதமுள்ள ¾ யார் யாருக்கு என்றால் சண்முகம் , ராஜதங்கம், ராஜசின்னம் ஆகும். மேற்படி ராஜதங்கம் ராஜசின்னம் இந்த வழக்கின் 1, 2 பிரதிவாதிகள் என்றால் சரி. வழக்கு சொத்தில் ¼ பங்கு என்பது என்ன என்றால் 4 1/16 ஆகும். நான் அதில் எவ்வளவு பங்கு கேட்கிறேன் என்றால் எனது அப்பாவின் பங்கில் 1/7 பங்கை நான் கேட்கிறேன். அப்படியானால் 1/28 பங்கை நான் கேட்கிறேன் என்றால் சரிதான்.

4) எனது பிராதில் கூறியது போல் எனது அப்பாவிற்கு 1/3 பங்கு என்று தவறாக குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரி. எனது அப்பா என்னிடம் சொன்னதை அப்படியே எழுதியிருந்தேன், அதன் பின்பு நான் யோசித்து பார்த்தில் ¼ என உணர்ந்து கொண்டேன். மேற்படி விபரத்தை நான் எனது பிராதில் சொல்லியுள்ளேனா என்றால் இல்லை. 1960 ல் உள்ள கிரய ஆவணத்தில் 1,2 பிரதிவாதிகளின் தாயர் பெயரில் கிரயம் வாங்கப்பட்டது என்றால் சரி. அந்த பத்திரத்தில் ராஜலட்சுமி அம்மாள் அவருடைய பணத்தை கொண்டு கிரயம் வாங்கினார் என்று எழுதப்பட்டுட்டுள்ளது என்றால் சரியல்ல. எனது அப்பாவின் வருமானத்தால் வாங்கப்பட்டது ஆகும். மேற்படி விபரத்தை வா.சா.ஆ.1 ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் இல்லை. மேற்படி அந்த தகவலை எனது அப்பா

இறப்பதற்கு முன்பாக சொன்னார்.

5) மேற்படி விபரத்தை எந்த தேதியில் என்னிடம் சொன்னார் என்ற விபரத்தை பிராதில் சொல்லவில்லை என்றால் சரிதான். நான் தேதியை குறித்து வைக்கவில்லை. வழக்கு சொத்தில் புத்தளம் ரோட்டில் 13 கடைகள் வரிசையாக உள்ளது என்றால் சரி. அக்கடைகளில் வாடகை இருந்தவர்களிடம் நானோ எனது அப்பாவோ வாடகை பத்திரம் போட்டு வாடகை வசூல் செய்தற்கான ஆவணம் எதுவும் உள்ளது என்றால் உள்ளது. அதனை இந்த வழக்கில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை.

6) அந்த கடைகளுக்கு முன்பாக 10 தென்னைமரங்கள் இருந்தன என்றால் 6 தென்னை மரங்கள் இருந்தன. அந்த தென்னை மரங்களை பாட்டம் கொடுத்து பாட்ட சீட்டு எழுதி வாங்கீனீர்களா என்றால் இல்லை. அந்த சொத்தில் முந்திரி மரம் நான்கு ஐந்து நின்றன என்றால் சரியல்ல. தென்னை மரங்கள் தவிற வேறு பெரிய மரங்கள் இல்லை. பிராதில் நானும் எனது அப்பாவும் சேர்ந்து சொத்தைகூட்டாக அனுபவித்தற்கான ஆவணத்தை இந்த வழக்கில் தாக்கல் செய்தேனா என்றால் இல்லை. 2011 ல் எனது அப்பா இறந்தற்கு பிறகு வழக்கு தாக்கல் செய்ததற்கு முன்பு வரை எனது பெயரில் தனிப்பட்டு அனுபவத்திற்கான ஆவணங்கள் ஏதாவது இந்த வழக்கில் தாக்கல் செய்திருக்கிறேனா என்றால் இல்லை. எனது அப்பாவின் பெயரில் ஆவணங்கள் உள்ளது அதனை நான் தாக்கல் செய்திருக்கிறேன்.

7) 2011 அவர் இறப்பதற்கு முன்னால் எனது அப்பா பெயரில் உள்ள இந்த ஆவணங்களை இந் த வழக்கில் தாக்கல் செய்திருக்கிறேன் என்றால் இல்லை. வழக்கு தாக்கல் செய்ததற்கு முன்பாகவே கட்டிடத்தை இடித்து விட்டார்களா என்றால் சரியல்ல. வா.சா.ஆ.4 மற்றும் 5 விடுதலை பத்திரம் எழுதுவதற்கு முன்பாக வழக்கு சொத்தில் உள்ள கட்டிடத்தை இடித்துவிட்டார்கள் என்றால் இல்லை. வா.சா.ஆ.9 உள்ள ரசீதுகளில் என்னுடைய பெயர் இல்லை என்றால் சரிதான். எனது அப்பா பெயரில் உள்ளது. அதற்கான பணத்தை நான் செலுத்தினேன்.

8) வழக்கு தாக்கல் செய்த பின்பு சொத்தில் கட்டிடம் இடித்த பின்பு வழக்கில் ஆவணம் வேண்டும் என்பதற்காக மோசடியாக வா.சா.ஆ.9 எனது செல்வாக்கை பயன்படுத்தி ரசீதுகளை உற்பத்தி செய்துள்ளேன் என்றால் சரியல்ல. 1,2 பிரதிவாதிக்கு அவகாசப்பட்ட சொத்தில் இடிக்கப்பட்ட கட்டிடத்திற்கு நான் வரிசெலுத்த எனக்கு உரிமையில்லை என்றால் சரியல்ல. இடித்த கட்டிடத்திற்கு வரி கட்ட இயலாது. 2011 ற்கு பிறகு வழக்கு சொத்தில் வரியாவணங்களை எனது பெயரிற்கு மாற்றம் செய்ய மனுதாக்கல் செய்தேனா என்றால் இல்லை. 10.12.1997 ல் எனது அப்பாவிடம் இருந்து சொத்துகளை எழுதிவாங்கிகொண்டு வேறு சொத்துகளில் எனக்கு உரிமையில்லை என்று சம்மத

பத்திரத்தை எழுதிக்கொடுத்தேனா என்றால் இல்லை. சர்வே எண் 534/1 ல் 3.750 சென்று ஆவண எண் 281/97 ன் மூலம் எனது பெருக்கு எனது அப்பா எழுதிக்கொடுத்த ஏற்பாடு ஆவணம் தற்போது என்னிடம் காண்பிக்கப்படும் ஆவணம் என்றால் சரி. அது பி.வா.சா.ஆ.1 ஆகும்.

9) 10.02.1997 ல் சர்வே எண் 534/1 ல் 5 சென்று ஆவண எண் 282/97 ன் மூலம் எனது பெருக்கு எனது அப்பா எழுதிக்கொடுத்த செற்றில் மென்று ஆவணம் தற்போது என்னிடம் காண்பிக்கப்படும் ஆவணம் என்றால் சரி. அது பி.வா.சா.ஆ.2 ஆகும்.

10)தற்போது என்னிடம் காண்பிக்கப்படும் ஆவணம் 10.02.1997 ல் நான் எனது அப்பாவிற்குஎழுதிக்கொடுத்த சம்மத பத்திரம் என்றால் சரியல்ல. சர்வே எண் 184/3 ல் 32 ஏர் வயலை எனது அப்பா இஷ்டதான ஆவணம் மூலம் 1999 ல் எழுதிக்கொடுத்தார் என்றால் சரி. தற்போது என்னிடம் காண்பிக்கப்படும் ஆவணம் 27.12.1997 ல் நான் எனது அப்பாவிற்குஎழுதிக்கொடுத்த சம்மத பத்திரம் என்றால் சரியல்ல.

10) 2004 ல் எனது அப்பா மாவட்ட ஆட்சியரிடம் புகார் கொடுத்தார் என்றாலும் தற்போது என்னிடம் காண்பிக்கப்படும் ஆவணம் அந்த புகார் மனு என்றால் எனக்கு தெரியாது. 28.11.2003, 27.12.2003 ஆகிய தேதிகளில் எனது அப்பாவை மிரட்டியதாக அந்த கடிதத்தில் சொல்லியுள்ளதா என்றால் எனக்கு தெரியாது. உண்மையில் நான் அவ்வாறு நடந்து கொண்டேனா என்றால் இல்லை.

11) 27.02.1994, 15.03.19966, 10.09.1997, 23.10.2000, 02.06.2000, 27.08.2001 அகிய தேதிகளில் எனது அப்பா என்மீது சுசீந்திரம் காவல் நிலையத்தில் அவரை மிரட்டியதாகவும் காலில் வெட்டியதாகவும் கொடுத்த புகார்களை மாவட்ட ஆட்சியரிடம் கொடுத்த மனுவில் எனது அப்பா குறிப்பிட்டுள்ளார் என்றால் எனக்கு தெரியாது. என்னை விசாரிக்கவில்லை பல நபர்கள் என்மீது பொய்யாக புகார்களை கொடுப்பார்கள் என்று சொல்லிவிட்டு சாட்சி தற்போது யாரும் புகார் கொடுக்கவில்லை என்று கூறுகிறார்.

12) நான் அரசு போக்கு வரத்து கழகத்தில் ஓட்டுநராக வேலைப்பார்த்தேன் என்றால் சரி. நான் பல நபரிடம் கடன் வாங்கினேன் என்றால் இல்லை. எனது அப்பாவின் முக்கால் பாக சொத்தைநான் மிரட்டி எழுதிவாங்கியதாக எனது அப்பா அவருடைய மனுவில் கூறியுள்ளார் என்றால் சரியல்ல. 1992 ல் எனது அப்பாவை கத்தியால் குத்தி சொத்தை பங்கு கேட்டேன் என்றால் சரியல்ல. 8.1.2009 ல் எனது அப்பாவை பஞ்சாத்து தேர்தலில் நிற்க சொல்லி மிரட்டினேன் என்றால் சரியல்ல.

13) எனது அப்பாவை காலில் வெட்டியதற்கு என்மீது முதல் தகவல் அறிக்கை தாக்கல் செய்யப்பட்டதா என்றால் எனக்கு தெரியாது. பல முறை எனக்கும் எனது அப்பாவிற்கும் சண்டை வந்துள்ளது. போலிஸ் கேஸ் ஆகவில்லை. 1,2 பிரதிவாதிகளின்அம்மா சொத்து

அவர் இறந்த பிறகு அவரது பிள்ளைகளையே சேரும் என்றால் சரியல்ல. எனது அம்மா பெயர் கனகலீலா ஆகும். எனது அம்மாவின் வாரிசு சான்றிதழை வாங்கியுள்ளேன். அதனை தாக்கல் செய்ய இயலும். எனது அம்மா வின் வாரிசுகளாக ராஜசிங், ராஜசேகர், ராஜகீதா, ராஜலெட்சுமி ஆகிய நான்கு பெயர்களும் வாரிசு சான்றிதழில் உள்ளன என்றால் சரிதான். வா.சா.ஆ. 7 ஆவணத்தில்எனது அப்பாவிற்கு வாரிசுகளாக அவரது இரண்டு மனைவியின் பிள்ளைகள் காண்பிக்கப்பட்டுள்ளது என்றால் சரி.

14) அதில் முதல் மனைவிப் பிள்ளைகள் என்றும் இரண்டாவது மனைவியின் பிள்ளைகள் என்றும் பிரித்து காண்பிக்கப்படவில்லை என்றால் சரி. 24.04.2018 ல் நான் தவறுதலாக வா.சா.ஆ .7 ஆவணத்தை பெற்றுள்ளேன் என்றால் சரியல்ல. நீதிமன்ற கட்டணம் தவறாக கட்டியுள்ளேன் என்றாலும் நான் கூட்டு சுவாதினத்தில் இல்லை என்றாலும் சரியல்ல. சுவாதின் எடுப்பதற்காக தனி நீதிமன்ற கட்டணம் செலுத்தவில்லை என்றால் சரியல்ல. சண்முகத்தின் மனைவில் சொத்தில் சண்முகத்திற்கு பங்கு இல்லை என்றால் சரியல்ல.

15) வா.சா.ஆ- 2 ஆவணத்தை 1982 ல் எழுதிக்கொடுத்தபோதோ எனக்கு தெரியுமா என்றால் நான் சிறு பிள்ளை தெரியாது. எனது அப்பா உயிருடன் இருக்கும்போது அதனை சொல்லியுள்ளார். 2022 ல்தான் நான் அதனை பார்த்தேன். இந்த வழக்கிற்கு மூலக்காரணம் எதுவும் இல்லை என்றால் சரியல்ல. 2011 ல் இருந்தே 1,2 பிரதிவாதிகளிடம் சொத்தை பிரித்து கேட்டு வருகிறேன். 2011 ற்கு பிறகு அவர்களிடம் சொத்தை பிரித்து 3 முறை கேட்டுள்ளேன். எந்தெந்த தேதிகள் என்று ஞாபகம் இல்லை. நான் வழக்கறிஞர் அறிவிப்பு செய்தேனா என்றாலும் பாகப்பிரிவினை கேட்டு கடிதம் அனுப்பினேனா என்றாலும் இல்லை.

16) 2011 ம் வருடத்திற்கு பிறகு நான் எந்த தேதியில் சொத்தை பிரித்து கேட்டேன் என்று தெரியாது. மேற்படி விபரம் அனைத்தும் பிராதில் சொல்லவில்லை என்றால் சரி. 1,2 பிரதிவாதிகள் வா.சா.ஆ. மற்றும் 5 ஆவணங்களை எழுதிய பின்பு நான் எதையும் கேட்டேனா என்றால் இல்லை. எனது பிராதில் பிரதிவாதிகளை சந்தித்த போது வா.சா.ஆ. 4 மற்றும் 5 ஆவணத்தை ரத்து செய்ய ஒப்புக்கொண்டதாக சொல்லிய விபரம் பொய்யானவை என்றால் சரியல்ல. பிராது பேரா 7 ல் சொல்லிய விபரம் பொய்என்றால் சரியல்ல. பேரா 10 ல் கூட்டு சுவாதினம் என்று கற்பனையானது என்றால் சரியல்ல. பேரா 11 ல் சொல்லியுள்ள மூலக்காரணம் தவறானவை என்றால் சரியல்ல. 7 முதல் 9 பிரதிவாதிகள் வழக்கு சொத்தில்பங்கு கேட்டு இந்த வழக்கை நடந்தி உரிமை கேட்க வில்லை என்றால் எனக்கு தெரியாது.

17) வா.சா.ஆ.2 ஆவணத்தை இந்த 40 ஆண்டுகளாக நான் எதிர்த்து நடவடிக்கை எடுக்கவில்லை என்றால் சரி. நான் எனது அப்பாவை மிரட்டியதுபோல் 1, 2 பிரதிவாதிகளை மிரட்டி 5 லட்சத்தை கொடுக்கவில்லை என்றால் வழக்கு தாக்கல் செய்யவில்லை என்றால்

சரியல்ல. 1960 ல் தனியார் பள்ளி ஆசிரியருக்கு மாதம் 5 ரூபாய் மட்டுமே சம்பளம் என்றாலும் அவருக்கு போதிய பண வசதி இல்லை என்பதால் 1, 2 பிரதிவாதிகளின் அம்மா அவரது பணத்தை வைத்து கிரயம் வாங்கிய சொத்து என்றால் சரியல்ல. எனது அப்பாவிற்கு எழுதிக்கொடுத்த சம்மத பத்திரங்கள் அனைத்தும் உண்மை என்றாலும் அதனை ஒப்புக்கொண்டால் வழக்குக்கு விரோதம் ஏற்படும் என்பதால் அதில் உள்ள கையொப்பத்தை என்னுடையது இல்லை என மறுத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. பிராது படி எனக்கு நிவாரம் கிடைக்கத்தக்கது இல்லை என்றாலும் , வழக்கு வாதியின் செலுவு தொகையுடன் தள்ளுபடி செய்யத்தக்கது என்றாலும் சரியல்ல.